உ

சண்முகநாதன்.

[REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER.]

SANMUKANATHAN.

பத்திர விகிதம்.

உள்ளூருக்கு ஆல 1-க்கு ரூ.	1-50
வெளியூருக்கு ,, ,,	2-00
தொலைவாய்ப்பகுதிக்கு ,,	2-50
தனிப்பிரதி சதம்	6

மாசமிருமுறை பிரசுரமாகும்.

நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு.	ரூ.—௪.
ஒரு கலத்துக்கு	6-00
அரைக்கலத்துக்கு	3-00
காற்கலத்துக்கு	2-00
வரி 1-க்கு	—8
அடுத்த முறைக்கு டை அரைவாசி.	

மலர் 5. } ❋ { யாழ்ப்பாணம், நள ஆல வைகாசிமீ 6வ (19—5—16) } ❋ { இதழ் 15

குருமயம்.

சங்கரன்றன் சால்பினுறுஞ் சண்முகநா தன்பெயரோ
டிலங்குதமாம் பத்திரமு மோராண்டு—தங்குமுடன்
உன்னரிய நன்னிலைமை யுற்றெங்கும் பல்கிட
வன்னவன்று ணைதுணை யாம்.

சண்முகநாதன்

யாழ்ப்பாணம் நள ஆல வைகாசிமீ 6வ வெள்ளிக்கிழமை

நல்லூர்வாசரும் உதயபானு பத்திராதிபரும்
சுத்தாத்துவித சைவசித்தாந்தப் பிரசாரகருமாகிய
ஸ்ரீமத் சு. சரவணமுத்துப்புலவரவர்கள்
சிவபதமடைந்ததனைக்குறித்து
அவர்மாணவருள்ஒருவராகிய
தென்கோவை அரசினர் ஆசிரியகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்
S- கந்தையபிள்ளை அவர்கள்கூறிய

கவிகள்:

—(0)—

அறுசீர்ஆசிரியவிருத்தம்.

சீரேறு சங்கானை நகருறையும் வேளாளன் றேனார் வாசத்
தாரேறு குவளையினன் சுப்பிரமணி யக்குரிசி றவத்தின் மாண்பால்
பேரேறு மத்துவித சித்தாந்த சைவநெறி பெரிது மோங்க
நீரேறு சடைமுடியோ னருட்பண்பே யுருவாகி நிறைந்த தென்ன (1)

சீரொழுகார் முகிலுறங்கு நீள்சோலை புடையுடைத்தாய் நிலத்தி னெய்தும்
ஊரொழுவாம் பதியன்னா னுஞற்றுதவப் பயனாக வுதித்த தோன்றல்
பேரொழுகு நான்மறையோர் சேர்ந்ததிரு நல்லைநகர் சிறக்க வாழ்ந்தோன்
நாரொழுகு திருவுளத்தா னம்பலவா ணிணைமலர்சேர் நயக்குநல்லோன் (2)

தண்டலையின் மதிதவழத் தாரகைகண் மதிற்கன்னியாத் தயங்குஞ் சென்னைப்
பண்டிதர்தம் போரேறு முருகேச பண்டிதன்பாற் பத்திபூண்டு
பண்டையபல் லிலக்கணமு மிலக்கியமும் பிறநூலும் பயின்ற தீரன் [கோன்.
மண்டுபெருந் தமிழ்ப்புலமை வாய்ந்து கவி மழை பொழியும் வரத்தின் மிக்

முன்னாளின் மிஞ்சவத் துறைவிளக்குங் காழிநகர் முனிவன் போலப்
பின்னாளிற் பரசமய கோளரியாய்ச் சிவநெறியே பேணு மாற்றால்
தன்னாயுள் பொருளனைத்து மளித்தருளு நாவலவன் றன்பாற் போந்து
பொன்னார்செங் கமலமல ரடியிணைக டன்றலைமேற் புனைந்த செல்வன் (4)

பொய்கண்டார் காணாத புனிதமெனு மத்துவிதம் புகன்மெய் வாக்காய்
மெய்கண்டா ருரைத்தருளுஞ் சிவஞான போதமுதன் மெய்ந்நூ லெல்லாங்
கைகண்டோ ரவற்றையெலா மென்போல்வார் பலர்க்களித்த கருணைவள்ளல்
மைகண்ட ரைந்தெழுத்து மறவாது தினம்பயிலும் மனத்தின் சீரான். (5)

தேங்குபுகழ்த் தமிழ்நாட்டி லஞ்ஞான விருள்கலச் சிறியோர் தம்பால்
தூங்குபர சமயமெனுந் தாரகைக ளொளிமழுங்கத் தூய ஞானத்
தாங்குமொழிக் கதிர்பரப்பி யுலகாக மலர்விரியத் தன்னே ரில்லா
தோங்குதய பானுவெனும் பத்திரிகைக் கதிபதியா யுயர்ந்த செம்மல். (6)

சாற்றரிய சிவஞானக் கடன்முகந்து சங்கமெனுஞ் சயில மேவிப்
போற்றுசபை யோர்கள்செவிப் புலநிறையச் சொன்மாரி பொழியு நீரால்
ஏற்றமிகு சித்தாந்த சைவமெனும் பயிர்வளர்க்கு மெழிலி யானோன்
நாற்றிசையுஞ் செலும்புகழான் பரசமய கண்டனமே நவிற்று நாவான். (7)

செல்விருந்து வழாதோம்பி வருவிருந்து பார்த்திருக்குஞ் செயலின்மிக்காள்
மல்கியுறு பெருஞ்சீலப் பொலிவினள் கற்பினல் வடமீ னனைப்பாள்
பல்குறுபே ரன்புடையா ளன்னபூ ரணியெனும்பேர்ப் பன்னி யோடு
புல்குமனை யறவாழ்வி லவனைவேள் வியும்புரிந்து புனித னானோன். (8)

அங்கிலமுஞ் செந்தமிழு மினிதுணர்ந்தோ னங்கிலய வரசர்தம்பால்
தங்குவட மாகாண வனபரிபா லனமெனுந் தலைமை பூண்டோன்
மங்கலிலாப் புகழாளன் மண்ணுலக வாழ்வொரீஇ வானம் புக்க
துங்கமுறு சிவஞான சுந்தரவேள் சுதனாகத் துலங்கப் பெற்றோன். (9)

சைவநெறிக் கொருதலைவன் சரவணமுத் தெனும்பெயரான் தக்கோர் நண்பன்
செய்யவிராக் கதவாண்டிற் கும்பமதி யிருபானிற் றிங்க ளோடு
துய்யபரவி யுறுதினத்தி னாரணனு நான்மறையுந் தொடர்ந்துங் காணு
மையமருங் கண்டனடி மலரிணைக்கீ ழத்துவித வாழ்வுற் றானே. (10)

நேரிசைவெண்பா.

செல்லு மிராட்சதத்திற் சேர்கும்ப மீரொருபான்
புல்லும் புகர்நாளிற் போயமர்ந்தான்—நல்லைநகர்
சாரு மதிஞன் சரவணமுத் துப்புலவன்
காரார் களத்தன் கழல்.

பெண்ணீர்மை குன்றலுறப் பேதை மடமனையைக்
கண்ணீர்க் கடலகத்துக் கைவிட்டான்—தண்ணீர்மைச்
சாரா தகன்றான் சரவணமுத் துப்புலவன்
ஆராயி னாழ்வலிதே யாம்.

தமிழ்சேர்ந்த நல்லைச் சரவணமுத் தீசன்
அமிழ்தே ரடிக ளடைந்து—கமழ்போகம்
மண்ணிடத்துப் பொய்யென்றான் மன்றனருட் பேறன்றி
எண்ணிடத்து மெய்யென் றுளிங்கு.

கட்டளைக்கலித்துறை

ஏற்ற மிகுநல் லிலக்கண நூலு மிலக்கியமும்
போற்று சிவாகம நூன்பொரு ளாவும் புகன்றனையால்
ஆற்றிடு நன்றிமற் றென்னே முங்ஙனுக் கவனியுளோர்
சாற்றுந் தமிழ்தேர் சரவண முத்தெனுஞ் சற்குருவே.

மண்மே லிறந்த மனிதரைப் பாட மதித்திலன்யான்
கண்ணீன யன்னை யெழுத்தறி வித்தோன் கடவுளெனும்
எண்ணானின் மேற்கவி பாடினன் யார்க்கு மியல்பிதன்றே
தண்ணார் தமிழ்தேர் சரவண முத்தெனுஞ் சற்குருவே.

பாற்கர சேது பதிமேற் பிரபந்தம் பாடியவன்
பாற்கர வாத பரிசுகள் பெற்றவன் பங்கயனும்
பாற்கர வாரணக் கோவு மறியாப் பதம்பணிவோன்
பாற்கர நாம சரவண முத்தெனும் பாவலனே.

நிலைமண்டல வாசிரியப்பா

நான்மறை முடிவி னவின்றருட் பொருளின்
செய்திமற் றிதுவெனத் தெளித்திடு முரவோர்
உள்ளம் போலத் தெள்ளிதி னமைந்த
தண்புனற் படிகரி னுண்டேன் பிலிற்றும்
வெள்ளிவணன் கோட்டு வள்ளவாய்க் கமலம்
புதுமல ராசனம் பொலியவீற் றிருக்கும்
வெண்ணிறப் பொலிந்த செஞ்சூட் டாசனம்
சருக்கரை மலிந்த வருக்கினர் பொருப்பினிற்
றேக்கமை தேறல் வாக்குதல் கடுப்பச்
செந்தமிழ்ச் செல்வர் செவிப்புலந் தழைப்பக்
கழிபே ரருஞ்சுவை கெழீஇசெழுந் தமிழாற்
கவிமழை பொழியுங் கவிஞர்தம் புலமைச்
செந்தா மலரக் திகழவீற் றிருக்கு
நாமக ளருட்டிற நலம்பெறத் தெரிக்கு
மாநகருஞ் சான்ற திருவமர் சிறப்பின்
மல்லல்வயல் புடைசூழ் நல்லைமா நகரோய்;
ஒழுக்கமுங் கல்வியும் விழுப்பமார் குணனும்
மானமு மளியு மானா வன்பும்
ஈசனடி மறவாத் தேசுநிறை மனனும்
பொலம்பெற மரீஇய நலங்கொள்பே ரறிவும்
தொல்காப் பியமுந் தொல்காப் பியமு,
நன்னூல் காரிகை சின்னூ லாதிய
கண்ணெனத் தகையவாந் கருவிநூற் பரப்பும்
பற்பல சமயிக ளற்புறு சீர்மையின்
உருத்தகத் தழீஇய பலப்பல நூல்களும்
வேதாந்த மென்னும் விழுப்பெருங் கனியின்
சார மீதென்னத் தவத்தினிற் றூயோர்
பரவுறு குமர குருபர னருளிய
சைவ சித்தாந்தத் தெய்வவான் பனுவலும்
பால்புனற் பிரிக்கும் வால்வெள் ளோதிமப்
பண்புமேற் கொளீஇ நுண்பொரு டெரித்து
கற்றுண ரறிவின் பெற்றிமற் றிதெனை
விரிகட லுலகோர் விழுமிதி னுணரியா
மெய்ந்நெறி காட்டி வைதிகத் தழைப்பச்
சைவநிலை விளக்குந் திவ்விய குணத்தோய்
மோனவாழ் வருளு ஞானமா ருட்குறி
தெற்றெனத் தெரிக்குஞ் செயன்மற் றம்ம
சங்கித கொல்லென் றிறம்பூ தெய்துபு
கண்டோர் களிப்பினின் மண்டுபு னன்முழுப்
பானிறம் படுத்து வாலிதின் வயங்கும்
வெளியன் வுடஇ வெண்ணீறு புனைந்து
தாரகை நவெட் டண்மதி கின்றெனப்
புலவர்பே ரவையுட் பொலிந்திடு மதியோய்
பொருடொறும் புணர்ந்த புலஞ்சால் சிறப்பின்
நல்லெண் ணெழுத்து நன்னூல் வனப்பு
கற்பனை வியப்புங் கலந்தமன றழீஇச்
சவியுறத் தெரிந்த கவிமழை பொழியுந்
தண்டமிழ் தெரிந்த பண்டிதன் சரவண
முத்தெனும் பெயரா னிதநலத் தெய்தத்
செல்விசை நிலைஇய நல்லிசைப் புலவ
முன்னாள் வடகிழ வன்னவிரின் மரீஇ
அருமறை முனிவர்க் கரும்பொருள் பலபட
கருமிடற் றிறைவன் செம்மலர் போன்றுன்
மன்னுபே ரன்பொடு சென்னியிற் கொண்டுதம்
பன்னுநல் லுணர்வினர் பலருளங் கொளீஇய
சித்தாந்த சைவச் செம்பொரு ளுணர்வி
னிலைபெறுங் குரவ னதலி னின்பாற்
கருணையொடு பொலிந்த பரமா னந்த
மருவிய பெருவாழ் வருளுக வெனவே.

ஒருதுறைக்கோவை நூலாசிரியர் வண்ணைநகர்
ஸ்ரீமத். க. வைத்தியலிங்கம்பிள்ளை அவர்கள் சொல்லியவை.

கட்டளைக்கலித்துறை

சரவணமொத்தவுலப்பற்றசிலரைத்தாத்திரியைச்
சரவணமுத்தனைமாமேருவேட்டினைத்தந்தவன்பால்
சரவணமொத்தனியாசங்கமட்டுந்தனிப்புலவன்
சரவணமுத்தனடைந்தானவன்புகழ்சாற்றரிதே. (1)

அற்புதமேய்ந்தபிரசங்கமாற்றலுமாசுமுதற்
கற்பனைவாய்ந்தகவிபுனையாற்றலுங்கண்டநிரு
பற்பலரேத்துசரவணமுத்தெனும்பாவலன்றன்
புற்புதம்பூவியலெனநேயானடிபோந்தனனே. (2)

சரவணமுற்றவப்போத்துமஞ்சமுனாங்கர்சரண
விரவணவுற்றுமனக்கரியான்பதமேகருசிர்க்
கரவணலற்றவகத்தான்கணங்களிக்கநல்லைச்
சரவணமுத்தடற்சித்தாந்தசிம்புளுஞ்சார்ந்தனவே. (3)

பஞ்சமும் பலவகைப்பொழுதுபோக்கும்.

(:0:)

ஒரு தேசத்திலாயினும் ஒரு நாட்டிலாயினும் வாழுஞ் சனங்களெல்லாம் ஒரேகாலத்திலே தத்தம் ஊண் உடையாதியவற்றுள் முட்டுறுதலே பஞ்சம் எனப்படும். மழையின்மை, பெருவெள்ளம், பருவக்காற்றின்மை, வேலையாட்களுக்கு வேலையின்மை, பருவமழை பெய்தும் பயிர்விளையாமை, பயிர்விளைந்தும் பிராணிகளாலழிவு, அரசர் கொடுங்கோன்மை, இராசகலகம், அந்தணர் முதலிய வருணத்தார் தத்தம் நெறிபிறழ்தல், சிவாலய மடாலய வித்தியாலய தர்மங்கள் கிரமமாக நடைபெறாமை முதலாயின வெல்லாம் அப்பஞ்சம் வருதற்குக் காரணங்களாம்.

இப்பொழுது சில வருடங்களாகப் பருவமழையின்மையாலும், பருவக்காற்றின்மையாலும் நம்மூர்த் தானியம் விளைவுகுன்றிவிட்டது. உள்ளூர்க் கலகங்களினாலே சுருட்டுக் கைத்தொழிலாளருக்கும் வியாபாரிகளுக்கும் முயற்சிதன்றியது. மலையாளதேசத்திலே சில கட்டுப்பாடுகளை அத் தேசத்தார் உண்டாக்கியதனாலே ஆண்டையில் வியாபாரநிமித்தம் சண்டைப்புகையிலைத் தோட்டஞ்செய்யுங் கமக்காரரும் வியாபாரிகளும் ஊக்கங்குன்றி ஏக்கங்கொண்டார்கள். தேயிலைத்தோட்டம் முதலாய விடங்களிலே ஐரோப்பியதுரைகளின் கீழ்வேலையாயிருந்த சின்னத்துரைமாரும் அவ்வைரோப்பிய ரெல்லாஞ் சண்டைக்குச் சென்றதனால் வேலையின்றி வீடுவந்துசேர்ந்து செய்வதொன்றறியாது தியங்குகின்றார்கள். இராசகலகமோ வருடக்கணக்காக நடந்து கொண்டேயிருக்கிறது. பிறதேசங்களிலிருந்து பண்டபதார்த்தங்களைக் கொண்டு வருகின்ற கப்பல்களை யெல்லாம் சத்துருக்கள் ஆழியில்அமிழ்த்தி விடுகின்றனர். அதனால் பிறதேசங்களி லிருந்து வருவனவாகிய தானியங்கள், ஊன், உடை முதலியஎவ்வகைப் பொருள்களும் முட்டுறுவனவாயின.

நந்தேயத்து முன்னோரனுபவித்த பொருள்களாகிய, நீராகாரம், வரகு தினை சாமை குரக்கன்முதலிய தானியவகைகளும், கிழங்குவகை, கனிவகைகளும், ஏடு எழுத்தாணிகளும் வாழையிலை பலாவிலை முதலாய போசனபாத்திரங்களும் உள்ளூரவர்கள் நெய்த வஸ்திரங்களும் சுதேசவைத்தியமும் மூலிகைகளும். பிறவும் அநாகரிகமென்றெண்ணிப் "பழையன கழிதலும்" என்று அவற்றையெல்லாம் முற்றவிலக்கித் தேநீர் கோப்பிநீர் மெஷின்ஸ் உணவு நெசில்உணவு தகரப்பால் தகரவெண்ணெய் ஜாம்ஸ் (பழப்பாணி) பிஸ்கற்தசையூறல் மதுபானவகை பளிங்குத் தட்டைப் போசனபாத்திரம் காகிதங்கள் முதலியவற்றையே நாகரிகப்பொருள்களென்று நம்பிப் "புதியனபுகுதல்" என்று கையாண்டுவந்த பொருள்களெல்லாம் ஒறுப்பனவாயின. ஆதலால் அவற்றையனுபவித்த நந்தேயத்தவர் வருந்துகின்றார்கள்.

இந்தக் கஷ்டமான நிலைபரத்திலே படங்காட்டியும், நாடகங்காட்டியும் பணந்தேடுவோர் தோலிருக்கச் சுளைவாங்குவோர் போலவும்; சத்திராதியூரைப் பிச்சையெடுத்துக் கெடுத்தவன் போலவும் நம்மூரைத் தொல்லைப் படுத்துகின்றார்கள். இவர்களுள்ளே இந்தியா முதலிய பிறவிடங்களிலிருந்தும் அநேகர் வந்திருக் கிறார்கள். இக்கூத்தாடுபவர்களை ஆடவேண்டா மென்றுவது கூத்துப்பார்ப்பவர்களைப் பார்க்கவேண்டா மென்றுவது நாந்தடைசெய்யவில்லை பின்னர் நம்மூர்ப் பணம் வெளியூருக்குப் போவது கூடாதென்பதே நங்கருத்து. பண்டைக் காலத்திலே வசித்த நம்மூர்ப் பிரபுக்கள் தனித்தேயாயினும் இருவர் மூவர் கூடியேயாயினும்! இவ்வித நாடகங்களைத் தம்பொறுப்பில் ஆடுவித்தும், தாங்களும் வேடமிட்டாடியும் சனங்களுக்கு இனாமாகவே காட்டிவந்தார்கள். அதுவேபோல இப்பொழுதும் யாராவது பணம்பெறாமல் இனாமாக நாடகங் காட்டுவார்களேயாமாயின் அவர்களே பரோபகாரிகளெனப்படுவர். இந்த நாடகவிஷயமாக இந்துசாதன இங்கிலீசுப் பத்திரிகையிலே பத்திராதிபரவர்கள் "இந்தப் பஞ்சகாலத்திலே இந்திய கூத்தாடிகள் நம்மூர்ப்பணத்தைக் கொண்டுபோகிறார்கள். அவர்களது கூத்துக்குப் போவதிலும் நம்மூர்ப் பிரசித்திபெற்ற பிரபுக்களாடுங் கூத்துக்குப் போவது நலமாகும்" என்னுங் கருத்துப்பட எழுதியிருக்கிறார்கள். அது புத்தியாயிருக்கவில்லை. ஏனென்றால் இந்தியர் முதலிய பிறரெல்லாம் தஞ்சீவியத்துக்கு வேறுவழியின்றி இக்கூத்தையே நம்பியிருத்தலாலும் அவர்கள் தங்கூத்தை யினாமாகக் காட்டுதல் முடியாதகாரியமாதலாலும், நம்மூர்ப் பிரபுக்களுள்ளே எவரேனும் ஒருவராயினும் இக்கூத்தைக்கொண்டு சீவிப்பவர் இலராதலாலும், இவர்கள் தங்கூத்தை எத்தனை முறைதான் இலவசமாகக் காட்டினும் தகுமாதலாலும், நம்மூர்ப் பிரபுக்களே நம்மூரின் நன்மையைவிரும்பு வோராதலாலும். நம்மூரின் பிரபுக்கள் தாங்கள் கூத்தை இலவசமாய்க் காட்டல்வேண்டும். அப்படியிரண்டொருமுறை காட்டினால் சனங்கள் இலவசமாய்ப் பார்க்கும் கூத்தைவிட்டுப் பொருள்கொடுத்துப் போவார்களா? இன்னும் நம்மூரவரேயாகப் பிறரெவரேயாக. நாடகங்களைப் பணம் பெறாது இனாமாகக் காட்டுபவரே தேசாபிமானி, பரோபகாரி, எனப்படுவர். ஆதலால் பணம் பெற்றுக் கூத்தாடுவோர் யாவராயிருப்பினும், அவரை அரசாட்சியார் தடைசெய்தலும் இலவசமாயாடுவோர் எவராயிருப்பினும் அப்பரோபகாரிகளுக்கே அனுமதிகொடுத்தலும் நன்மையாகும்.

இந்துசமயமும் சைவசமயமும்.

(முற்றொடர்.)

இனிச் சைவசமயத்தைக் குறித்துப்பேசப்புகுமுன்னே சமயம் என்பதைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

சமயம்.

சமயம் என்னுஞ்சொல்லானது காலம், பொழுது, அவசரம் எனவும் மதம், கொள்கை, கருத்து எனவும் பொருள்படும். அவைதாம் யாங்ஙனமெனின் இறப்பு, நிகழ்வு, எதிர்வு, எனக்காலம் மூன்றாகும். காலமும் தொழில் நிகழ்ச்சிக்கே வேண்டியது. தொழிலும் இடம்பற்றியே நிகழும். ஆகவே யாதானுமோர் தொழில் நிகழ்வுக்குக் காலம் இடம் இன்றியமையாதவாயின, என்னை? கொற்றன் வைகைத்துறையிலிருந்தான். கங்கைக் கரையிலிருக்கின்றான், யமுனைத்துறையில் இருப்பான் என்புழி வைகை, கங்கை, யமுனை, என்னும் இடமும் இருத்தல் ஆகிய தொழிலும் முக்காலங்களும் பெறப்படுதலின். இக்காலபேதம் இடபேதங்கள் ஆன்மாவுக்கேயுள்ளன. அஃதேகதேசவியாபகமுடையதாகலின் என்னை? வைகை, கங்கை, யமுனை என்னுமிடங்களில்அக்கொற்றன் ஒரேகாலத்திலிருத்தலும் எங்கும் எப்பொழுதுமிருத்தலும் இன்மையின், இக்காலபேத இடபேதங்கள் கடவுளுக்கு இல்லை. அவர் சர்வவியாபகமுடையவராகலின், சர்வவியாபகமுடைய ஆகாயத்தை வைகைத்துறையிலிருக்கது கங்கைத்துறையிலிருக்கின்றது யமுனைத்துறையிலிருக்கும். என வழக்குவோமாயின் அது பழிப்புக்கிடமாய் முடியும். அஃதேபோல "அங்கிங்கெனாதபடியெங்கும்பிரகாசமாய்" நிறைந்திருக்கின்ற கடவுளுக்குக் காலபேதம் இடபேதமில்லை. அங்ஙனம் ஆன்மாவுக்கே இடபேதம் காலபேதங்கள் உளவென்று கொள்ளுங்கால் அவ்வான்மா பஞ்சேந்திரியங்களை விடயிக்கும்பொழுது சத்தத்தையறியுஞ்சமயமும், ரூபத்தையறியுஞ்சமயமும், பரிசத்தையறியுஞ் சமயமும் ரசத்தையறியுஞ்சமயமும், கந்தத்தையறியுஞ்சமயமும் ஆகிய இவையெல்லாஞ் சமயங்களாகாவோ? எனில், இன்ன காலத்திலேதான் அழியும் என்றறியப்படாது விரைந்து அழிந்தொழியுமியல்பினதாகிய இம்மனிதசரீரத்தோடு அப்பஞ்சேந்திரிய உணர்வுகளும் சுகானுபவங்களும் அழிந்தொழியுமாதலால் அங்ஙனங் கூறுதல் பொருந்தாது. பின்னர்ச் சமயந்தான் யாதோ என்னில், ஒருவன் இவ்வுலகத்தையும் இதிலுள்ள ஆன்மாக்களையும், தன்னையும் பார்த்து "நான் யார்? என் உள்ளமார்? ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார்? இவ்வுலகமும் இதிலுள்ள ஆன்மாக்களும் யார்? இவைதாமே தோன்றினவா? வேறொருவராலே தோற்றுவிக்கப் பட்டனவா? அங்ஙனம் ஒருவராலே தோற்றுவிக்கப்பட்டதென்றால் அவர் தான் யாவர்? அவரும் ஒருவரா? பலரா? அவர் ஏன் இவற்றைத் தோற்றுவித்தார்? என்பனவாகிய விசாரணைகளைச் செய்யும் அவசரந்தான் ஆன்மாக்களுக் கென்றுமறியாது நிகழுஞ் சமயம் ஆதலால் இம்மானசிக சமயமே சமயமெனப்படும். இவ்வாறே ஒவ்வொருவரும் விசாரணைசெய்து தத்தம் அறிவுக்கெட்டிய வரையிலே முடிவு செய்து தத்தம் கொள்கைகளையே உண்மையென நாட்டுவர். ஆதலினாலே ஒன்றற்கொன்றொவ்வாத மதங்கள் பலவாயின. இதுபற்றியே ஸ்ரீ தாயுமானசுவாமிகளும்:

"பூதலய மாகின்ற மாயை முதலென்பர் சிலர் பொறி புலனடங்கு மிடமே, பொருளென்பர் சிலர் கரண முடிவென்பர் சிலர் குண போன விடமென்பர் சிலபேர், நாத வடிவென்பர் சிலர் விந்துமயமென்பர் சிலர் நட்ட நடுவேயிருந்த, நாமென்பர் சிலர் உருவமா மென்பர் சிலர் கருதி நாடிலருவென்பர் சிலபேர், பேதமற உயிர் கெட்ட நிலையென்றிடுவர் சிலர் பேசின் அருளென்பர் சில பேர், பின்னு முன்னுங் கெட்ட சூனிய மதென்பர் சிலர் பிறவுமே மொழிவரிவையாற், பாதரசமாய் மனது சஞ்சலப்படுமலாற் பரம சுக நிட்டை பெறுமோ, பார்க்குமிடமெங்கு மொரு நீக்கமற நிறைகின்ற பரி பூரணனந்தமே. என,

அருளிச்செய்தார்கள். என்னை? "நிலம், நீர், தீ, காற்று என நான்கே தத்துவங்கள். ஆன்மா என்பதோர் பொருளும் கடவுள் என்பதோர் பொருளும் எக்காலத்தும் இல்லை. நிலம், நீர், தீ, காற்று என்னும் நான்கு பூதங்களின் கலப்பினாலே சரீரம் உண்டாகின்றது சரீரத்திற்கு இன்ப துன்பங்கள் இயல்பாயுண்டாவன. உடம்பெடுத்தற்குக் கன்மமே காரணம் என்பது பொய்." என்பர் சிலர். இவரை உலோகாயதர் என்பர். இவர் கடவுளில்லை என்பதால் நாத்திகர் எனவும்படுவர். சிலர் இந்திரியங்களே ஆன்மா என்பர். அந்தக்கரணான்மவாதஞ் செய்வர். சிலர்பிராணான்மவாதஞ்செய்வர், சிலர் விஞ்ஞானான்மவாதஞ் செய்வர் இன்னும் வேறு பற்பலரும் பற்பலவாதம்சாதிப்பர். ஆகலின்.

இதுகாறுங் கூறியவாற்றால் ஆன்ம ஞான அவசரபேதங்களே சமயங்களென்பது விளக்கிய வாறாயிற்று. இனிச் சைவத்தைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

சைவம்.

சிவ சம்பந்தமுடையது. இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களுள்ளே இறுதிக்கணின்ற அதர்வணமானது முன்னைய மூன்றனுளடங்கு மாகலின் வேதம் மூன்றெனவும்படும். இதுபற்றியே வேதம் "த்ரயீ" எனப்பட்டது. அம்மூன்றனுள்ளே நடுவிலிருப்பது யசுர் வேதம். அது ஏழு காண்டங்களை யுடையது. அவற்றுள்ளே நடுக்காண்டத்திலுள்ளது ஸ்ரீ ருத்திரம். ஸ்ரீ ருத்திரத்தின் நடுவிலுள்ளது ஸ்ரீ பஞ்சாக்கர மகா மந்திரம். அப் பஞ்சாக்கரத்தின் நடுவிலிருப்பது "சிவ"மந்திரம். ஆகலால் வேதத்தின் மெய்ப்பொருள் சிவம் என்பது விளங்கும்.

சிவம் என்னுஞ் சொல்லுக்கு மங்கலம் என்பது பொருள். மங்கலகுணங்கள் எவையோ அவை எல்லாங் கடவுளிடத்தே பொருந்தியிருப்பதனால் அவர் சிவன் எனப்படுவர். இத்தகைய சிவனையே முழுமுதற்கடவுளென்று நம்பி, அவரருளிய வேத சிவாகம வழி யொழுகுவோர் சைவர் எனப்படுவோர். இனி இக்காலத்திலே சைவப்போலிகள் மிகப்பலவாக மலிந்துள்ளன. அவற்றையுஞ் சிறிது கூறுவாம். சிவனை வணங்குவதோடு மாமிச போசனமில்லாதிருத்தலே சைவம் என்பர் சிலர். அவற்றோடு சரீரமுழுவதும் விபூதியை உத்தூளனமாகவேனும்; திரிபுண்டரமாகவேனும் தரித்துக்கொள்ளலே சைவமென்பர் சிலர். ஸ்நானதி நித்திய கர்மா நுட்டானங்க ளில்லா திருப்பினும் பிறர் காணாதவாறு மறைவாயிருந்துண்ணலே சைவம் என்பர் சிலர். எப்பாதகஞ் செய்யுங் குலத்தவராயினும் மறைவாயுண்ணுஞ் சந்ததியே சைவமென்பர் சிலர். அநுலோமர் பிரதிலோமர் முதலிய சங்கர சாதியாரேயாயினும் சிலகாலம் மாமிச போசனத்தை யொழித்து விபூதிக்குறியும் பொறித்தமாத்திரத்தே வேட்டுவனெடுத்த மென்புழுப்போலச் சாதி மாறிச் சதுர் வருணத்தார்க்கும் மேலாயதும் வேறாயதுமாகியுள்ள ஒருசாதியே சைவமென்பர் சிலர். தாம் எக்குலத்தவராயினும் தம்மினுமுயர்ந்த வருணத்தாரையும், குலத்தாரையும் இகழ்தலும், அவரிடத்தே போசனம் பண்ணாமையுமே சைவம் என்பர் சிலர். எவ்வித அநாசாரத்தோடாயினும் கூலியின்பொருட்டுக் கோயிலுக்குப் பூமாலை தொடுத்தலும் விற்றலுமே சைவமென்பர் சிலர். மந்திரமறியாரேனும் தந்திரமறியாரேனும் ஆசாரமிலரேயாயினும் அன்பு இலரே ஆயினும் பிறரை வஞ்சித்து வயிறு வளர்த்தற்பொருட்டு வெறும் பூச்சுப் பூசி வெறும் பொட்டிட்டு வெறும் மணி குலுக்குவதே சைவம் என்பர் சிலர். நிற்க,

முன்னர்க் கூறிய ஆன்ம ஞான அநுபவ அவசர வேறுபாடுகளாய்த் தோன்றிய பல வகைச்சமயங்களுள்ளே, சைவசமயமானது மற்றெல்லாச் சமயங்களையும் சோபானமாகக் கொண்டு அவற்றிற்கெல்லாம் நாயகமுந் தாயகமுமாய் இராசாங்கத்திலமர்ந்த சமயமாகும். இதுபற்றியே "இயல்பென்றுந் திரியாமலியமமாதி, எண்குணமுங்காட்டி யன்பா லின்பமாகிப், பயன்குளப் பொருள்கள் பரிவாரமாகிப், பண்புறவுஞ் சௌபான பக்ஷங்காட்டி, மயலறு மந்திரஞ் சிட்சை சோதிடாதி, மற்றங்க நூல் வணங்க மௌன மோலி, யயர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்தில், அமர்ந்தது வைதிக சைவ மழகிதந்தோ." எனத் தாயுமானசுவாமிகளுந் திருவாய்மலர்ந்தார்கள். அன்றியும் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்ட வேதமாகிய விருக்ஷத்திலேயுள்ள பிரயோசனங்கள் இலையும், தளிரும், அரும்பும், பூவும், பிஞ்சும், காயும் எனப்பலவாக அவ்வவற்றுள் ஒவ்வொன்றனையே சிறந்தனவாகக் கொண்டு கொண்டு வந்துளோரும் பற்பலராக, அவ்விலை தளிர் முதலாயினவெல்லாம் மற்றைச் சமயங்களேயாக, அவற்றைக் கொண்டு உவந்தோர் அவ்வச் சமயிகளேயாக, அவ்வேத பாதவத்தின் சிரசின் பழுத்த வேதாந்தமென்னும் பழத்தின் சாரமாயுள்ளது சைவசமயம் என்பதனை "நீயே, வேதமென்னும் பாதவம் வளர்த்தனை.

பாதபமதனிற் படுபயன் பலவே அவற்றுள் இலை கொண்டுவந்தனர் பலரே யிலையொரீஇத் தளிர் கொண்டு வந்தனர் பலரே தளிரொரீஇ யரும்பொடு மலர் பிஞ்சருங் காயென்றிவை விரும்பினர் கொண்டு கொண்டு வந்தனர் பலரே அவ்வாறுறப்பு மிவ்வாறு பயப்ப ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த வாராவின்ப வருங் கனி பிழிந்து சாரங்கொண்ட சைவ சித்தாந்தத் தேனமுதருந்தினர் சிலரே. என்னுங் குமர குருபர சுவாமிகள் வாக்காலறிக. இதுகாறுங் கூறிப்

போக்க வாற்றால் இந்து சமய மென்பதோர் சமயமின்றுமென்பதும் சைவ சமயத்துக்கு இந்து சமயம் எனப் பெயரிட்டு வழங்கல் பொருந்தாதென்பதும், அங்ஙனம் வழங்கல் அறியார் கூற்றுமென்பதும், சமயம் இன்னதென்பதும் சைவம் இன்னதென்பதும் சைவசமயமின்னதென்பதும் விளக்கப்பட்டது. இனிச் சைவசமயிகள் இவரென்பதும் சைவசமயநெறி யிவையென்றும் காலம்வாய்த்துழி விளக்குவாம்.

மொழி பெயர்ப்பு.

சாணக்கிய நீதிவெண்பா.

சந்திரகுப்த மகாராசாவின் மந்திரியா யிருந்த சாணக்கிய பண்டிதர் என்பவர் வடமொழியிலே செய்தநூல் சாணக்கிய சதகம் எனப்படும். இச்சாணக்கியருக்கு விஷ்ணுகுப்தர் என்று வேறு பெயரும் உண்டு. இச்சாணக்கியசதகத்தை உலகுவக்குமாறு செந்தமிழிலே யாவரும் எளிதிற் பொருளுணருமாறு மொழிபெயர்த்து வெண்பாவால் யாத்தபரோபகாரசீலர் யாவரென்றால் வடமொழி தென்மொழிக்கடலை ஒருங்கே பருகி யேப்பமிட்டுத் தமிழுலகெங்குந் தம்புகழ் நாட்டி விளங்கும் புலவர்திலகராகிய ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் பிள்ளையவர்களே இந்நீதிவெண்பாக்களெல்லாம் கற்குந்தோறும் கற்போருக்கு மகிழ்ச்சியையும், அதிசயத்தையும், சற்புத்தியையுங் கொடுக்கும். இந்நூலிலே வந்திருக்கும் நீதிகளிற் சில, நீதிவெண்பா, வாக்குண்டாம், திருக்குறள் முதலிய நீதிநூல்களிலே வந்தனவாயும் முன் ஒருபோதும் தமிழ்நூல்களிலே வந்திலாதனவாயும் இருக்கின்றன. அந்நீதிகளைக் கற்பவர் யாவரும் கஷ்டமின்றி எளிதிலே மனதிற் பதிய வைத்திருப்பதற்கு வாதியாமாறு இனிய வெண்பாவால் யாத்தசாதுரியமே ஆக்கியோன் புலமைக்குத்தக்க பெருமையாகும். எச்சாதியாருக்கும் எச்சமயத்தாருக்கும் பொதுவாயுள்ள நீதிகளையே புகட்டுவதனால் இந்நூல் எவர்க்கும் பொதுவாகிய நூலாகும். ஆதலால் சாதிசமய பேதம்பாராது ஆண்பெண் என்னும் இருபாலாரும் இந்நூலைப் படிக்கிடாதது புத்தியாதம். அன்றியும் ஆங்கில கலாசாலைகளில் உயர்தரங்களுக்குக் கற்பிக்க இது சிறந்த நூலாகும். எல்லா வித்தியாசாலைகளிலும் உபயோகித்தல் மிக நன்மையாகும்.

படிப்போரறியுமாறு சில வெண்பாக்களை எடுத்து தருவாம்.

பண்டிதர் மகிமை.

சொல்லணி சேர் கல்வித் துறைபோய பண்டிதர்தம் வெல்லும் மிகல் வேந்தரினு மிக்கவர் காண்—சொல்லுங்கால், வேந்தர்க்குத் தந்நாட்டின் மேன்மையுண்டாம் பண்டிதர்க்குச், சேர்ந்தவிட மெல்லாஞ் சிறப்பு.

இப்பாடலில் "மன்னனுமாசறக் கற்றோனும்" என்னும் ஔவைபாடலோ டொத்தபொருள் செறிந்திருத்தல் நோக்கத்தக்கது.

கொக்கின் குணம்.

மீனம் வருமளவும் மெய்பொடுக்கி நீர்க்கரையின், மோனமுறுங் கொக்கின் முயற்சியெனத்—தானிருந்து, காலமிடம் வாய்த்திடுதல் கண்டு வினைபுரிக, சாலும் முழுமுயற்சி சார்ந்து.

இப்பாடலிலே கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன் குத்தொக்க சீர்த்தவிடத்து" என்னும் வள்ளுவர்பாடலோ டொத்தபொருள் செறிந்திருத்தலும் நோக்கத்தக்கது. விரிவஞ்சி விடுத்த எஞ்சியவற்றையெல்லாம் நூலிற் கண்டு களிக்க. இந்நூலின் விலை அணா இரண்டே. அதனை ஆக்கியோனிடம் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்நூலெல்லாம் எடுப்பாரும் படிப்பாரும் அறிவாரும் ஆதரிப்பாரும் இனறித் தளர்நிலையடைந்து வரும் இக்காலத்திலே தமது வாழ்நாளையெல்லாம் அவமே போக்காது வடமொழியைச் சிக்கறுத்து மொழிபெயர்த்தலாலே தமக்கு வருந் தொல்லைகளையும் பிரயாசங்களையும் அறிபவரும் அறிந்து சன்மானஞ் செய்பவரும் இல்லையே என்று மனஞ் சிறிதேனுந் தளராது மொழிபெயர்த்தவற்றைப் பாவாகயாத்தலின் வருஞ்சிரமங்களைப் பொருட்படுத்தாமலும் யாத்தவற்றை அச்சிடுவித்தலால் வரும் பொருட்செலவை மதியாமலும் லோகோபகாரமாகவே இந்நூலை வெளிப்படுத்திய "தாயினுஞ்சாலத்தயாநிதி"யாகிய இப்புலவர்பெருந்தகையாரது நன்றி தமிழ்மக்களெவராலும் எக்காலத்தும் மறக்கப்படுவதன்று.

வடமொழி தென்மொழிகளிலே வல்ல ஏனைப்புலவர்களும் இவ்வாறே நூல்களை வெளியிடுவார்களாயின் மிக நன்மையாகும்.

கையொப்ப வரவு.

ஸ்ரீ. வ. க. மு. இராசலிங்கம் அல்வாய் வடக்கு, ரூபா. 2.

பிரமஸ்ரீ. கே. எஸ். மகேசசர்மா காரைதீவு, ரூபா 1.

யுத்தம்.

அயர்லாந்துக் கலகத்திலே சேர்ந்த மோன் மாக் பிறிட்ஸ் என்பவன் சுட்டுக் கொல்லப்பட்டான். வேறிருவர் மரணபரியந்தம் மறியற்தீர்ப்புப் பெற்றார்கள். வேறு மூவர் மூன்று வருஷ மறியலுக்கு அனுப்பப் பட்டார்கள். இப்பொழுது அயர்லாந்தில், கலகம் அமர்ந்துவிட்டது.

முன், இலங்கைத் தேசாதிபதியாயிருந்த, சேர்றபேட்சாமேஷ், அயர்லாந்தின் உதவிச்சக்கிடுத்தாராய் நியமிக்கப் பட்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேர் வரையில், அயர்லாந்திலிருந்து இங்கிலாந்துக்கு கைதிகளா யனுப்பப் பட்டிருக்கின்றார்கள்.

காக்கேசவில், டயார்பெக்கிர் பக்கமாகச் சிறுசண்டைகள் நடந்தன. துருக்கியர் சேனையிலுள்ள கேட்சாதியார் துரத்தப்பட்டார்கள்.

றேவண்டவுஸ் என்னும் பட்டினத்துள்ள ஆயுதசாலைகளை ருசியர்கைப்பற்றினர்.

மாமற்றன் என்னும் பட்டினம் ருசியர் வசப்பட்டது.

துருக்கர் ஆர்மினியருக்குச் செய்த நிஷ்டூரங்கள் அவர்கள் முன் எப்போதாவது செய்த கொடுமைகளிலும் கொடுமையானவை. 1915ம் வருஷம் ஜூலையீ துருக்கர் ஆர்மினியரை வரைவிட்டு ஓட்டத்தொடங்கினார்கள். நூற்றுக்கணக்கான வாலிபர்களை ராசதுரோகிகளெனக் குற்றஞ்சாட்டிப் பிடித்தார்கள். அவர்களைத் தோணிகளிலேற்றிச்சென்று கடலி லமிழ்த்திவிட்டார்கள். அனேகர் அயற்குறிச்சிகளுக்குத் துரத்தப்பட்டார்கள். பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். பிள்ளைகள் குத்திக் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்ட பிள்ளைகளின் தலைகள் இலக்குக்குவைத்துச் சுடப்பட்டன. எஞ்சினோர் எர்சரும் என்னுமிடத்துக்கு அனுப்பப்பட்டார். வீதிகளெங்கும் பிரேதங்களேகாணப்பட்டன.

கல்கேற் என்னுங் கப்பல் உஷான்றுக்கு 150 மைலுக்கு மேற்கே கடலிலமிழ்ந்தியது.

எதிற்றிறியா என்னும் இங்கிலீசுக் கப்பலும் ஆழிவாய்ப்பட்டது.

இங்கிலீசின் முதன்மந்திரியார் அஸ்குவித் அயர்லாந்து தேசத்துத் தலைவருக்குச் சென்றபொழுது சனங்கள் அவரை மிக மகிழ்ச்சியோடு ஏற்றனர்.

லோட்காடின்ச் அவர்கள் அயர்லாந்தைப்பற்றிச் செய்யும் விசாரணை முடியும்வரைக்கும் அயர்லாந்துதேசத்துக்கு ஓர் தேசாதிபதி நியமிக்கப்படமாட்டாரென்று றூற்றர் தந்திமூலமா யறிகிறோம்.

சிக்காக்கோவிலுள்ள நாளாந்தப்பத்திரிகையொன்றின் கடிதரொருவர் சேர் கிறேயுடன் யுத்தசமாதானத்தைப்பற்றி பேசியபொழுது கிறே சொல்லியதாவது பிரிதானியரும் நட்பரசாட்சியாரும் யுத்தத்தால் விளைந்த நட்டங்களிறுபடும்வரையும் சமாதானப்பேச்சே கிடையாது. சாதிக்கட்டுப்பாடுகளுக்கு மாறுயிருக்கப்படாது. சேர்மனியருக்கு சகல இஷ்டங்களும் கொடுபடவேண்டும். சேமர்னிய இராசாங்கத்தில் பிரசைகளுக்கு அதிகாரமிருக்கவேண்டியது. அப்படியிருந்தால் இப்பேர்ப்பட்ட யுத்தம் இனிமேல்வராது.

சேர்மனி.

1உ ருசிய அரசாட்சியார் சுவேதன் அரசாட்சியாரைக் கேட்டுக்கொண்டபடி சேர்மனியிலுள்ள யுத்த கைதிகளுக்கு ஏராளமாய் உணவுப் பொருட்களைக் கொண்டுபோக வழிவிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

3உ சமாதானஞ் செய்யவேண்டுமென்று சேர்மனியில் கலகந் தொடங்கிவிட்டது. சேர்மன் அதிகாரிகள் இவ்விஷயத்தைப் பிரசுரிக்காமல் தடுத்தும் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சங்கதிகள் வெளிப்பட்டு விட்டன. பாட்ஸ்டாம் என்னுமிடத்தில் தொழிற்கட்சியார் கூடிச் சமாதானத்தைநாடிப் பேசினார்கள். அனேகர் பிடித்தடைக்கப் பட்டார்கள்.

பெர்லின் கலகத்தில் 25 பேர் கொல்லப்பட்டு 100 பேர் காயப்பட்டார்கள் அதில் பிடிக்கப்பட்டவர்களில் ஹேர் லிப்னெக்ட் என்னும் அபேதவாதியும் ஒருவர். அவரை விடும்படி சேர்மன் பார்லிமேந்தில் அபேதவாதிகள் கேட்டும் பயனில்லை.

எல் 20 என்னும் செப்பிலின் சேதமுற்று நோர்வேயிற்போய்ச் சேர்ந்தது. அது செல்கையில் ஐந்து ஆறு பேர் சமுத்திரத்திற் குதித்தார்கள். கப்பற்றலைவனும் ஒரு மாலுமியும் படகிலேறித் தப்பிக் கொண்டனர். பின்பு ஒருமலையில் மோதி ஒருபாகம் உடைந்தபின் வேறு சில மாலுமிகள் குதித்தனர். பின் இரண்டாய் உடைந்து கொபர்ஸ்பர்த் என்னும் இடத்திற்போய் இறங்கிற்று. அதிலிருந்த மூவரை ஒரு டொர்பிடோ காப்பாற்றியது. கப்பல் முழுதுஞ் சேதமாயிற்று. அதிலிருந்து பிடிக்கப்பட்ட மாலுமிகள் கட்டுக்காவலில் வைக்கப்பட்டார்கள். அதை வடகடலில் ஓர் பிராஞ்சிய குருசர்க்கப்பல் தொடர்ந்து வந்ததாம்.

9உ பிரஷியாவின் வடபாகத்தில் ஆல்ரீடானுவில் ஓர் விபத்துண்டாய் அங்கிருந்த தொழிற்சாலையும் 60 விமானங்களுஞ் சேதமாயின.

சமாதானம்—சமாதானத்தை விரைவில்செய்யும்படி சேர்மன் சக்கிரவர்த்தி விரும்புகிறாராம். அதைக்குறித்துப் பார்ப்பாசரும் சேர்மனிய சக்கிரவர்த்தியும் பொலினிலுள்ள அமரிக்கஸ்தானாபதியும் அமரிக்கபிரசாதிபதியைத் தலையிடும்படி கேட்டுக்கொண்டார்களென்று சொல்லப்படுகிறது அமரிக்கபிரசாதிபதி தலையிடுவதாயத் தெரியவில்லை.

சமாசாரங்கள்.

யாழ்ப்பாணத்தில். புத்தவிசாகக் கொண்டாட்டம்—யாழ்ப்பாணத்தில்வசிக்கும் புத்தர்கள் விசாகத்திலன்று ஓர் விழாக் கொண்டாடினார்கள் புத்தருடைய விக்கிரகத்தை ஓர் வண்டியிலேற்றி பந்தவெளிச்சத்தோடும் மேளவாத்தியத்தோடும் வீதிவழியாகக் கொண்டுசென்றார்கள்.

மரணம்—விவேகாநந்த வித்தியாசாலை மானேசர் ஸ்ரீமான். க. வேற்பிள்ளை அவர்களின் அன்னையார் சென்ற செவ்வாய்க்கிழமை காலமே தேகவியோகமெய்தினர். அவரையிழந்து துன்புறும் சுற்றமித்திராதியோருடன் நாமுமனுதாபப்படுகிறோம்.

கொலை—கொட்டடியிலே அம்மை ஆஸ்பத்திரிக்கு அணித்தாய் ஓர் மாரியம்மன்கோயில் உண்டு. இக்கோயிலுக்குச்சமீபமாக 24வயதுப்பிராயமுள்ள ஓர் வாலிபனின் பிரேதம் கழுத்திற்கத்திக் காயத்துடன் சென்ற சனிவாரத்தன்று காணப்பட்டது. இவன் இவனது பெற்றோருக்கு ஒரேயொரு மகனாயுள்ளவன். கொட்டடியே இவனது ஊர். இவனைக் கொலைசெய்தவர்கள் இன்னாரென்பது தெரியவில்லை. ஆனாற்சிலர் சமுசயத்தின்பேரில் பிடித்தடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

வெட்டுக் குளத்து அம்மன்கோயில் அதிஷ்டப்பிரதிஷ்டை—இப்பிரதிஷ்டை நிகழும் நளவருஷம் வைகாசிமீ 30உ திங்கட்கிழமை மேற்படி கோவிலில் பரிசு போடப்படும்.

பிரசங்கம்—நிகழும் நளவருஷம் சித்திரைமீ 29உ சண்டிருப்பாய் பத்திரகாளியம்மன்கோவில்மண்டபத்தில் பிரமஸ்ரீ. சி. பாலசுப்பிரமணிய ஐயரவர்களால் "ஆத்மலாபம்" என்னும் விஷயமும், ஸ்ரீமத். நாகலிங்கப்பரதேசியவர்களால் "காரைக்காலம்மையார் சரித்திரமும், பக்கவாத்தியசகிதமாக நன்கு பிரசங்கிக்கப்பட்டது.

வைகாசிமீ 2உ திங்கட்கிழமை இரவு இந்துகலாவிருத்திச் சங்கத்தாரின் கேள்விப்படி கொடிகாமம் கச்சாய்அம்மன்கோவிலில், பிரமஸ்ரீ சி. பாலசுப்பிரமணிய ஐயரவர்களால் "ஆன்மா" என்னும் விஷயமும், ஸ்ரீமத் நாகலிங்கப்பரதேசியவர்களால் "சமயாபிமானம்" என்னும் விஷயமும் பக்கவாத்தியசகிதமாகப் பிரசங்கஞ்செய்யப்பெற்றது.

கணித வெகுமதி—கேம்பிறிட்சுச் சருவகலாசாலையார் லோக்கல் பரீட்சையிலே கணிதப் பகுதியில் முதலானாய்வரும் மாணவர்க்கு வழக்கமாய்க்கொடுக்கும் வெகுமதி இம்முறை இலங்கையிலிருந்து சீனியர் பரீட்சைக்குச் சென்றோருள் K. சிற்றம்பலம் என்பவருக்குக் கொடுக்கப்பட்டது. இவர் யாழ்ப்பாணத்திலே அரசாட்சி நியாயதுரந்தராயிருக்கும் மெஸ். A. கதிரவேலு அவர்களின் புத்திரர். கொழும்பிலே இராசாங்க கல்லூரியிற் கற்றவர்.

பூமியதிர்ச்சி:—சென்ற 9உ இரவு கொழும்பு, ரத்தினபுரி, ஹுணுக்காலை முதலியவிடங்களிற் பூமி சிறிது கம்பித்ததாகச்சொல்லப்படுகின்றது.

ஓர் கொஸ்தாப்பல் மறியலுக்கனுப்பப்பட்டது:—கொழும்பிலே குடித்து வெறித்துத் தெருவில் விழுந்துகிடந்த ஓர் அவுஸ்திரேலிய பிரயாணி கையிற் கட்டியிருந்த கடிகாரத்தைக் களவாடின ஓர் கொஸ்தாப்பல் கொழும்புப் பொலிஸ் கோட்டில்விளங்கப்பட்டு ஆறுமாசமறியல் விதிக்கப்பட்டான்

ஒரு சாதுசங்க மஹோற்சவ உபந்நியாசம்.

——(:0:)——

பெங்களூர் ஆநந்தாஸ்ரமத்தில் சென்றமாதம் 9-ல் ஸ்வாமி சித்தாநந்த அவர்கள் செய்த உபந்நியாஸத்தை யான கவனித்தவரையில் வெளியிடுகிறேன்.

அன்புள்ள ஸாதுக்களே! பக்தசிகாமணிகளே!

நாமனைவரும் இந்த ஆநந்தாஸ்ரமத்தின் அஷ்டவருட மஹோற்சவத்தில் சேர்ந்து ஸத்காலக்ஷேபஞ் செய்யக்கருதியது தெய்வசம்மதமே. ஆனால் வருடத்திற் கொருமுறை ஸாதுஸங்க மஹோற்சவத்தைக கொண்டாடுவதேன்? என்று சிலர் வினவுதல் கூடும். அதற்கு விடைபகர்தல் நியாயமாகும்.

பண்டைக்காலத்திலிருந்து இந்துமுகத்தார்க்குள் விவேகிகளாயிருந்தவர்கள் நமது பாரதவருஷத்தில் பற்பலவிடங்களில் வசித்து வந்தவர்களானபடியால் அடிக்கடி ஒருவர் மற்றொருவரைச் சந்திக்கவும், ஸம்பாஷணைகள் செய்யவும்; க்ஷேமங்களை அறியவும், மனிதத்தன்மையைப் பார்க்கவும் போதுமான காலமும், சந்தர்ப்பங்களும் வாய்க்காமலிருந்தமையின, 12வருடங்களுக் கொருமுறையாவது ஹரித்வாரம், காவிமுதலிய க்ஷேத்திரங்களில் ஸாதுஸங்கக் கூடி ஸத்விஷயமான மஹோற்சவத்தைக் கொண்டாடினர்; அவ்வாறே இக்காலத்தும் கொண்டாடப்பட்டு வருகின்றதென்பது பிரசித்தமாம். இவ்வாறு நடந்தேறிவந்தபோதிலும் சிற்சில திவ்விய ஸ்தலங்களில் பக்தர்கள் வருடந்தோறும் கூட்டங்கூடி வருவதை நாம் காண்கின்றோம். எல்லா மஹோற்சவங்களும் பெரும்பான்மையும் வெயிற்காலத்தில் நிகழ்கின்றனவேயன்றி மழைக்காலத்தில் நிகழ்வதில்லை. ஏனெனில் மழைக்காலத்தில் இக்கஜனங்கள் தமது ஜீவன வஸ்திகளைச் சம்பாதிக்கவேண்டி வெயிற்காலத்தில் ஓய்வடைகிறார்கள். இச்சமயத்தில் எல்வர் வைதிக மஹோற்ஸவங்களையுங் கொண்டாடி வருகிறார்கள் இந்த மஹோற்சவங்களில் பக்தர்களுக் குண்டாகும் ஆநந்தம் அளவிடற்பாலதன்றாம். உற்சவங்களில் அநுஷ்டிக்கவேண்டிய மானிடக்கடமைகளினின்று தவறாதிருப்பதே உத்தமமாகும். எல்லா விஷய சம்பந்தங்களை மறப்பதே மானிடஜன்மத்தைப் பொருத்ததாகுமென்று விவேகிகளறிந்தே யிருப்பார்கள்.

பக்தர்களின் மஹோற்சவங்களில் சில மஹாத்மாக்கள் விஜயஞ்செய்து அடியார்களுக்குத் தரிஸனந்தந்து ஞானோபதேசங்களைச் செய்வார்களென்பது ஹிந்துஸமூகத்தாரின் அநுபவமாம். இந்த நோக்கத்தையே முக்கியமாகக் கருதி மஹோற்சவங்களைக் கொண்டாடுதல் ஸகஜம். இத்தகைய அபிப்பிராயங்களோடு கூடிய உற்சவங்களிலும் ஸாதுஸங்க மஹோற்சவம் விசேஷமாக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஸாதுக்களுக்கே ஆராதனை அன்னதானம் முதலிய ஸத்கைங்கரியங்கள் நமது இன்றும் நடைபெறுகின்றன. ஏனெனில் வடதேசத்து ஜனங்கள் தங்களது மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய நால்வரைப் படித்தரமாக வணங்குகிறார்கள். மாதா பிதாவையும், பிதா குருவையும், குரு தெய்வத்தையும் விளக்குவதால், இச்சந்தர்ப்பத்தில் குறிக்கவேண்டிய குரு ஆசாரியன் என்னும் ஸ்தானத்தைச் சார்ந்த ஸாதுக்களுக்கே சேவைசெய்வதாகிய மஹோற்சவத்தை இதுகாறும் நம்மிலோர் கொண்டாடிவருதலை நாம் பார்க்கிறோம் உலக போகங்களை நாடும் பக்தர்களுடைய மஹோற்சவங்களை பார்த்திருப்பினும், அப் போகங்களை விரும்பாத ஸாதுக்களது மஹோற்சவம் பரவலமாய் நிகழ்கின்றது. பரஸ்பரத்தோடு கூடிய ஸாதுஸங்க மஹோற்ஸவத்தின் பரமார்த்தத்தை விவேகிகளறிவார்கள். சுக்கநிவிருத்தியும் பரமானந்தப் பிராப்தியடைவதுமே, மஹோற்சவத்தின் கருத்து; இவற்றைவிட வேறொன்றில்லை. ஸாதுக்கள் வருடத்திற் கொருமுறை குருக்கமோரிடத்திற் கூடி ஸத்விஷயத்தில் தங்களது அநுபவங்களையும், பரதரிஸன ஸாதனங்களையும் விளக்கி ஆத்மாபிவிருத்தியை யறிந்து ஆநந்தமடைகின்றனர்.

இதுபற்றி விசேஷமாக வைதிகநூல்களிலும், சிறந்த பகவத்கீதையிலும் விளக்கத்தக்க. சிலவருடங்களுக்குமுன் மஹாரிஷி தேவேந்திரநாதர் தமது ஸார்த்திகதானத்திலும் இவ்வாறு திருவாய்மலர்ந்திருக்கின்றனர். நிற்க, இப்போது சென்னையின்கண் ஸாதுஸங்க மஹோற்சவம் பக்தர்களால் வருடந்தோறுங் கொண்டாடப்பட்டு வருதல் பிரசித்தம். இவ்வாறே பரமஹம்ஸர்களால் இவ்வாச்சிரமத்தில் ஸாதுஸங்கம கூடியதற்காக நாமனைவரும் ஆநந்திப்போமாக. (தொடரும்)

நவீனசமயங்களுஞ்சமயிகளும்

அரைகுறையாகவெனினும் பூரணமாயெனினும் ஈங்கேயத்தவர் விரும்பிக் கற்கும் பாஷை இங்கிலீசேயாம். தேவபாஷையாயிருந்தாலும் கர்த்தாய்ப் பாஷையாயிருந்தாலும் கேட்கவும் பேசவும் இனிமையான பாஷையாயிருந்தாலும் பிரசித்திபெற்றேரெனத் தம்மனவிலே தம்மை மதித்திருமாந்திருக்கும் நம்மவராலே வெறுத்தொதுக்கப்படும் பாஷை தமிழேயாம். தமிழ் வெறுக்கப்படும் பாஷையாயினமைக்குக் காரணம் யாதோவெனில், கன்மமலசமும் காலவித்தியாசமுமாம். இவற்றினலே வித்தியாசாலைகளிலே உயர்தரத் தமிழ்க்கல்விகுறைந்து அரசினர் பரீக்ஷைக்கு மாத்திரம் வேண்டிய வாசிப்பு எழுத்து கணிதம் பூமிசாத்திரம் என்றிவற்றேடு தமிழ்க்கல்வி முடிவு பெறுகின்றது. சிலவித்தியாசாலைகளிலே இலக்கணமுங் கற்பிக்கப்படுதலுண்டு. கிறீஸ்தவித்தியாசாலைகளிலே கல்விபயிலும் எச்சமயப் பிள்ளைகளுக்கும் அச்சமயபாடங்களும் போதங்களும் ஊட்டப்படும். சைவவித்தியா சாலைகளிலே கல்விபயில்வோர் சைவசமயப் பிள்ளைகளாயிருந்தும் ஒரு சமயபோதமும் போதிப்பதில்லை. சைவ இங்கிலிசு வித்தியாசாலைகளிலே சனாதனதர்மம் என்ற பாடம் கற்பிக்கப்படும். இவ்வகைத்தாய வித்தியாசாலைகளிலே கற்றுத்தேறி வெளிக்கிளம்பிய நஞ்சைவவாலிபர்கள் தம்மனவிலேயே தம்மைப் பெரிய மனுடரென மதித்துக்கொண்டு தம்மைப்போன்ற வேறுசிலரைத் துணைக்கொண்டு சங்கஞ்சேர்க்கவும் சபைகூட்டவும் சமயஸ்தாபகஞ்செய்யவும், சமயவாதஞ்செய்யவுந் தலைப்பட்டு, குத்தகைக்காரர் கிறந்துக் கண்டவிலைக்கு விற்கப்படுவனவும் எழுத்துப்பிழை சொற்பிழை வசனப்பிழை விஷயப்பிழையாதிய பிழையே மலிந்து பொலிந்துள்ளனவுமாகிய குச்சிலிக்கடை மாயாவாத போதகப் புத்தகங்களை வாங்கி வீடுநிறைய அடுக்கிவைத்துக்கொண்டு அவற்றுட்போந்த சில சொற்களையும் வசனங்களையுந் தாமாகவே நெட்டுருப்பண்ணிக்கொண்டு முற்பட்டுவிடுகிறார்கள். இவர்களுக்குச் சைவசித்தாந்த சாத்திரங்களாவது சித்தாந்த உபதேசமாவது கண்பட்டாற் கண்டுமுட்டு. செவிபட்டாற் கேட்டுமுட்டு. அம்மட்டோ, சித்தாந்தசாத்திரங்களை யியற்றினேரை மிக்க பேதைமையின் பற்றிய மூடர் என்றும், சித்தாந்தபோதகஞ்செய்வாரை கற்றறிமூடர் என்றும் சித்தாந்தசபைகளை "கற்றறிமூடர்கூடிப்பிதற்றுமிடம்" என்றும் வாய்கூசாது வெட்கமின்றிப் பரிகாசமுஞ்செய்வர். இவர்களிடத்திலே யாராவது சைவசித்தசாரமான சமயவிஷயம் பேசினல் "நீங்கள் பேசுஞ் சமயங்கள் மதபேதம்பாராட்டி ஒருசார்பு பற்றிப் பேசுஞ்சமயங்களாயிருக்கின்றன. இவைகளிலே எங்களுக்குச் சிறிதாயினும் பிடிக்கவில்லை. எல்லார்க்கும் பொதுவாகிய சமரசமதமே (யூனிவேஜல் றிலிஷன்) எங்களுக்கு வேண்டியது. வேதங்களிலே சொல்லப்பட்ட சமயம் ஆரியமதம். அல்லது இந்துமதம். ஆதலால் எங்களுக்கு அம்மதமேவேண்டும். அதுதான் எல்லார்க்கும்பொதுவான (யூனிவேஜல்றிலிஷன்)சமரசமதம் இதுதான நமது முன்னேர் ஆதியிலனுட்டித்த சமயம். அந்தசித்தாந்தமென்றும் சைவமென்றும் உள்ளசமயமெல்லாம் வருவாயின்பொருட்டுப் பிராமணர் கட்டிய கட்டுச்சமயங்கள் என்றுத்தர முரைக்கின்றார்கள் இவர்கள் சொல்லிய இவ்வார்த்தைகளைக் கேட்டஅளவிலேயே இவர்களைச் சகலசாத்திர பொதிவந்த னெனவும் சமயபக்தரெனவும் மதித்தாழுரும் வெறும் இங்கிலிசு சிலகற்ற ஒருபகுப்பினர் சிலர், இவர்கள் சொல்லை நம்பி தம்முன்னேர் அநுட்டித்துவந்த சமயாசாரங்களை யெல்லாம் முற்றத்துறக்கின்றார்கள். நவீனமதங்களையுங் கொண்டாடுகின்றார்கள். எங்ஙனமெனில், ஆபரணங்கள் பலவேறு வகையாயிருந்தாலும் பொன்ஒன்றே யானாற்போலவும்! பசுக்கள் பலவுருவினவானாலும் அப்பசுக்களின்பால் ஒன்றேயாதல் போலவும், பலவேறுவகைப்பட்ட மதங்களும் ஒரேகடவுளைப் பிரதிபாதித்து ஒரே முத்தியின்பத்தைக் கொடுப்பனவாம். எவர்களின் கடவுள் ஒருவரே. நாம் சைவருமல்லேம், சைவருமாவோம். வைஷ்ணவருமல்லேம். வைஷ்ணவருமாவோம். கிறீஸ்தவருமல்லேம் கிறிஸ்தவருமாவோம் என றுவாய்ப்பறைசாற்றி ஒருசமயநூலுங் கல்லாதும் ஒருசமயசின்னமுந் தரியாதும் திரிகின்றனர்சிலர். சிலர் அவனங் கூறினும் சிவவழிபாடுசெய்வர். சிலர் விஷ்ணுவழிபாடுசெய்வர். சிலர்கிறிஸ்தவாலயங்கட்குப் போவர். சிலர் சிவவிரதகாலங்களில் சிவாலயங்களிற் சென்று அங்கப்பிரதக்ஷிணஞ் செய்தும், மடுவில்மாதா கோயிலுக்குப்போய்க் காணிக்கை செலுத்தியும். மகமதியர்களின் விழாக்காலங் களிலே புலிவேடம் நாய்வேடம் முதலாய வேடமிட்டாடியும் கந்திரிச் சோறுண்டும் பின்னும் சைவரென்னும் பெயரோடுலவுவர். சிலர் சமய விஷயம் பேசும் பொழுது தமசொல்வார் தம்மைச் சர்வ சமய சாத்திரஞானிதன் என்று மதிக்குமாறு "அங்கே மகம்மதுநபி அவ்வனங் கூறினர்" "இங்கே கௌதம புத்தர் இவ்வனங் கூறினர்" "கிறிஸ்துநாதரும் இவ்வாறகவே மலைப் பிரசங்கஞ் செய்தார்" "கீதையிலும் கிருஷ்ணன் அதேபோலக் கூறினர்" "சிவஞான முனிவருக்கும் அது சம்மதந்தான்" "இது பற்றித்தான் தாயுமானவரும் பட்டினத்தாரும் அவ்வாறு கூறிப் போந்தார்கள்" என்பார்கள். சிலர் வைணவ விரதகாலங்களிலே பன்னிரண்டு நாமங்களுந் தீட்டிக்கொண்டு "கோவிந்தா கோவிந்தா" என்று சிவ விரத காலங்களிலே சரீரமுழுவதும் பட்டை பட்டையாக குறி வைத்துக் கொண்டு "அர கர மகா தேவா" என்றும் திரிவார்கள். சிலர் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பேதமில்லை "அரியுஞ் சிவனும் ஒன்னு இதறியாதவன் வாயில் மண்ணு" என்று சிவ சன்னிதானங்களிலே "கோவிந்த நாம சங்கீர்த்தனம் கோவிந்தா கோவிந்தா" என்றும், விஷ்ணு சந்நிதானங்களிலே. "நமப் பார்வ தீபதயே அர கர மகா தேவா" என்றும் சொல்லுவார்கள். இவர்களுக்கெல்லாந் தஞ் சமய மிது பிறர் சமய மிது என்னும் பேதமே தெரியாது. இவர்களுள்ளே பெரும்பான்மையோர் கொலை களவு கட் காம மாதிய பாதக பொக்கிஷங்களா யுள்ளவர்கள். இக் காவாலிகள் தங்கள் வயிற்று வளர்ப்புக்கும் புகழ் விருத்திக்கும் ஏற்ற வழி இதுவே யென்று கண்டு ஞான சாத்திர மென்று கடைப் புத்தகங்களை விலைக்கு வாங்கி ஞான வாராச்சி செய்வதாக நடித்துப் பிறருக்கு ஞானேபதேசஞ் செய்யத் தலைப்பட்டு விடுகின்றனர்.

ஐயையோ! ஞானமுங் கடைச்சரக்கா? புத்தகமன்றே கடைச்சரக்கு.

"எண்ணுபிரமாண்டயோகமிருக்கினுங்
கண்ணுரமுநினைக்கண்டறிவாரில்லை
உண்ணுடிபுள்ளேயொளிபெறநோக்கிற்
கண்ணுடிபோலேகலந்திருந்தானே."

எனவும்

"திரிவித லோகந் திரிதொரு ஞானி" எனவும் ஆன்றோர் கூறியவற்றை யார் கொல். சிலர் எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியாதவர்களே யாயிருப்பினும் கௌரவத்திற்காகவேனும் ஞான நூல்களைக் கையிற் கொண்டு திரிகின்றார்கள். இங்ஙனம் இவர்கள் காவித்திரியும் புத்தகங்களுள்ளே உண்மை ஞானநூல் மிகச் சிலவே. ஒழிந்தன வெல்லாம் போலி ஞான நூல்கள். இப்புத்தகங்களின் தார தெளியங்களை யறியுமாற்றலில்லாமலே தங்கள் கையிலகப்பட்டனவெல்லாம் ஞான நூல்களென மதித்துப் படித்துப் பலர் தங்களுக்கு ஞானம் வந்து புகுந்துவிட்டதாக எண்ணிச் சரியை கிரியைகளைப் பொருட்படுத்தாது ஆலயவழிபாட்டையுங் கைவிடுகின்றனர். மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை முதலாய ஆசாபாசங்களை முற்றத்துறந்து ஊண் உடையையும் வெறுத்துத் தவஞ்செய்யும் பெரியோர்களுக்கும் ஞானங் கைகூடுவது அரிதாமென்னில் அல்லும் பகலும் குடும்பச் சேற்றிற் புரண்டு அதனையே இன்பமாக நினைக்கும் பேதைகளுக்கா ஞானம் கடைச்சரக்கு போல்வது?

"இருட்பெருங் கடலுள் யாமத் தெறி மருத்திடைப்பட்டாங்குப், பொருட் பெருங் கடலாம் வேதம் புடைதொறு மலைப்ப விக்கா, லருட்பெருங் கடலே யெய்தோ மமைந்தில துணர்வியாங்கண், மருட் பெருங் கடலினிகும் வண்ண மொன்றருடி யென்றார்"

எனக்கந்தபுராணங் கூறுவதையு மறக.

இங்ஙனம்

ஓர் சைவன்.

உப்புஞ் சர்க்கரையும்.

—:0:—

சர்க்கரைவகைகளுள்ளே மணல்போலத் தூளாயிருக்குஞ் சர்க்கரையே மிகத் தித்திப்பானது. அந்தச் சர்க்கரையை ஒரு கல்வத்திலிட்டு மைபோல அரைத்துப் புசித்தால் அதன் சுவை குறையும். இக்காரணத்தினல் நன்றாகத் தூளாக்கிய சர்க்கரையிலே வேறு கலப்புப் பொருள்களைச் சேர்க்க முடியாதென்று நம்மூர்ச் சனங்கள் சொல்வது முழுதும் உண்மை யென்று நம்பவேண்டியதா யிருக்கிறது. ஒருருத்தல் அளவுள்ள தூளான சக்கரையோடு கால்கிறேன் அதாவது மிகச் சொற்பமான உப்பைச் சேர்த்துப் பணிகாரங்கள் செய்தால் மிக ருசியாயிருக்கும். இதை யறிந்துதான் நமது பிராம்மணர் மோதகஞ் செய்யும் போதுஉப்புச் சேர்க்கிறார்கள் போலும். இது நமது தன்வந்திரிமாலிலேயுள்ள "பதார்த்த குணரசிகரெத்திகாகரம்" என்னும் க்ரந்தத்திலே கண்டது நமது மால்ஆரம்பகாலந்தொடங்கி இதுவரையிலே நாளொன்றுக்கு 25பேர் வரையில்வந்து அரிய ரகசியங்களைக்கேட்டுங் கண்டுமறிந்து ஆனந்திக்கிறார்கள். ஆனல் இனிமேல் நம்மிடத்திலே யாதாயினுஞ் சந்தேகங்கேழ்க்கவருகிற வைத்தியாப்பியாசிகள் யாராயிருந்த போதிலும்.தாங்கள் வைத்தியங் கற்றகுருவினிடமிருந்து 6வருடத்திற் குறையாத அப்பியாசஞ் செய்தவரென்று சேர்டிபிக்கேட் கொண்டு வருபவர்களுக்கே சொல்லுவோம். கற்றுக்குட்டிகளுக்குச் சொல்லமாட்டோம். அவர்களுக்குச்சொன்னல் குரங்கின்கையில் அகப்பட்ட கொள்ளிக்கட்டைபோல ஊரைக்கெடுத்துப் போடுவார்கள்.

ப்ராம்மணதமர் சிலர் சாத்துப்படியும் கொழும்பான் போலக் கைவிட்டு வைத்தியம் என்ற பைத்தியம் தலைக்கொண்டு திரிகிறதைப்பார்த்தே நாம் இவ்வேலை தொடங்கினேம்.

இங்ஙனம்
M. V. மானேசர்
தன்வந்திரிமால்
கற்பொக்கணை
அக்கிரகாரம்.

ஐயவினு.

கற்பொக்கணை அக்கிரகாரத்துத் தன்வந்திரிமால் மானேஜர் M. V. அவர்களுக்கு;

ஐயா,

சண்முகநாதன் 5-ம் புத்தகம் 14-ம் இலக்கத்தில் தாங்கள் எழுதிய விஷயங்களைக் கண்டு ரெம்ப சந்தோஷமானேன். ஆனல் தங்களுடைய ஊராகிய கற்பொக்கணை இலங்கை இந்தியா முதலிய இடங்களைச் சேர்ந்ததா? முதல் அதைத் தெரிவிக்கவேண்டும், இரண்டாவது மகாபஞ்சமூலம், சிறுபஞ்சமூலம், மத்திமபஞ்சமூலம், சிவணபஞ்சமூலம், திருணபஞ்சமூலம் இவைகளை விளங்கப் படித்தவேண்டியதாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

[கற்பொக்கணையென்பது யாழ்ப்பாணத்து உடுவிலின் மேல்புறமாகவுள்ள வயல் வெளியிலுள்ள ஒருகோயிலடி. ப-ர்.]

இங்ஙனம்
K. V. சர்மா
நந்துசிந்தாம்.

விளம்பரங்கள்.

கற்பகவிருக்ஷம்.

இது தன்னையடைந்தயார் யார் என்னென்னகேட் கின்றார்களோ அவற்றையெல்லாம் கொடுக்கும் தேவவிருக்ஷமாகும். முக்கியமாய் அழகை அதிகப்படுத்தக்கூடியது கூந்தலேயன்றி வேறல்ல. நீங்கள் உங்கள் தலைமயிர் உதிராமற் றடுக்கவும், கறுப்பாயும் பளபளப்பாயும், மிருதுவ்வாயும் வளரச்செய்யவும் நல்ல கூந்தல் தையிலங்களைத் தேடுகின்றீர்கள். நீங்கள் வேண்டியவற்றையும் முகத்தேஜசையும் தேகபலம் முதலிய ஆயுளாரோக்கியத்தையும் தருவதில் கற்பக விருக்ஷத்திற்குச் சமமான

மணித்தைலம்.

என்னும் வாசனைத் தைலத்தை வாங்கி உபயோகியுங்கள்.. தறகாலம் வெளிவருவதாவும் தைலமன் போலன்று. சாஸ்திரோக்தமாகச் செய்யப்பட்ட தைலமிது. மூளையைக் குளிர்ந்திருக்கச் செய்யவும் ஞாபக சக்தியை விர்த்திசெய்யவும் ஏற்ற தைலம் நமது மணித்தைலம் ஒன்றுதான். இரவில் நித்திரைக்குப போகுமுன் உள்ளங்கை உள்ளங்கால், சிரசு முதலான விடங்களில் 2 3- துளி தைலத்தைத் தேய்த்துக்கொண்டால் தேகசிரமம், ஆயாசம், அதிக உஷ்ணம் இவைகளை நீக்கி நல்ல தேகாரோக்கியத்தைக்கொடுக்கும். புட்டி 1-க்கு விலை ரூ 1-6-0.

பொருத்தமானது.

அனேகர் பல மருந்துகளை விளம்பரஞ் செய்கிறார்கள். இக்காலத்துக்குஏற்றதாயிருக்கிறது. ஆனல் மெதுவாய்க் குணங்கொடுக்கும் மருந்தை உபயோகிப்பார்களா? அல்லது அதி சீக்கிரத்தில் அற்புத குணத்தைக்கொடுக்கும்,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகிப்பார்களா? இச்சிறந்த ஔஷதம், தேகபலம். மனோபலம், ஊக்கம், ஞாபகசக்தி, ஜீரணசக்தி முதலியவைகளைக் கொடுக்கின்றது. இன்னும் மேகரோகம், தலைவலி, நரம்புஸ்தானங்களின் தளர்வு சுருக்கிச்சொல்லில் சரீரசத்துருக்களாகிய சகல ரோகங்களையும் நீக்குகின்றன. இம்மருந்தன்றே ஜனசமூகத்துக்குப் பொருத்தமானது. 32-மாத்திரைக்கு விலை ரூபா 1.

வைத்தியசாஸ்திரி
மணிசங்கர்கோவிந்தஜீ
ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்
157 பிராட்வே, மதராஸ்.
27, DAM STREET
COLOMBO.

ஸ்ரீமத் கா. கந்தையாபிள்ளை
அவர்களியற்றிய

சங்கீதத் திரட்டு

இரண்டாம் பாகம்

வெளியாகிவிட்டது!

வெளியாகிவிட்டது!!

இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் பாட்டுகள் யாவும் புதிய பிளேட்டுகளிலிருந்து எடுக்கப்பட்டன. தென்பாங்கு, வேடிக்கைப் பாட்டுகள், தேவார திருவாசகங்கள் வேண்டியன அடங்கியிருக்கின்றன

விலை பிரதி ஒன்றுக்கு ரிங்கி 1—00.
தபால் கூலி 15.

சங்கீதத்திரட்டு

முதற்பாகம்.

இதுவும் இரண்டாம் முறை பார்த்துத் திருத்திப் பதிப்பித்தோம்.

விலை பிரதி ஒன்றுக்கு ரிங்கி 1—00.
தபால் கூலி 15.

சித்தாந்த ரத்நாகரம்

இவ் வரிய பெயர்புனைந்து இற்றைக்குப் 15-வருடங்கட்கு முன்னர் சென்னை-ஞானசோமசுந்தர நாயக ரவர்களால் வெளியிடப் பட்ட நூல்கள் பல. இவர் வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் என்னும் காரணப்பெயர் பெற்றேர். இந் நூல்களைப் படிப்போர் சைவசமயத்தின் உண்மைகளைத் தெளிவாயறிந்து கொள்ளும் இயல்புடைய ராவர். பிறமதப் பிரவேசஞ்செய்ய அஞ்சுவர்.

1—ஆசாரியப்பிரபாவம் 1-50.

இது நால்வர்சமயாசாரியர்களின் அவதாரத்தைப் பற்றிச் சொல்லிவரும் போதில் அவர்கள் ஏனையோரைப்போல் கருக்குழியில் புகுந்து வந்தவர்க ளல்ல வென்பதை விளக்கிக் காட்டும். ஆசாரிய சுவாமிகளின் பெருமையையும் வியந்துபேசும். ஒவ் வொருவரும் வாசித்தறியவேண்டிய நூல் இதுவாகும்.

2—சிவபாரம்யப்பிரதரிசினி 75 சேன்ட்.

இந் நூலிலே சிவபெருமானுக்குப் பிறமதத்தவர்கள் கூறுங் குற்றங்களுக்குப் பிரபல நியாயங் காட்டப்பட்டு ஒவ் வொன்றும் விரிவாய் மறுத்திருப்பது தோற்றும்.

3-சுக்லாம்பிரதரசலோகவிசாரம் 50 சேன்ட்.

இதில் பஞ்சாட்சரத்தின் மகிமை விளக்கப்பட் டிருக்கின்றது.

வேண்டுவோர் அடியிற் கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

இந்தியா, இலங்கைக்கு வி. பி. சட்டம் இல்லை.

முற்பணம் அனுப்பினுல், தபாற்கூலி இனும்.

S. CANDIAH PILLAI
PROPRIETOR
KLANG PRINTING WORKS
KLANG.

ஆறிரு தடந்தோழ்வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக், கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம் வாழ்கசெவ்வேள், ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்குவாழ்க, மாறிலாவள்ளிவாழ்க வாழ்க சீரடியரெல்லாம்.

Printed and published by V. Canapatip Pillai for the Proprietor at The Vidyalaya Press Jaffna.